பத்திரிக்கை செய்தி

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், திருநெல்வேலி

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் கல்வி விடுதிகளில் காலியாக உள்ள சமையலர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு

வ. எண்	பதவி	காலிப் பணியிடம்	ஊதியம்	இனச்சுழற்சி (பணியிட எண்ணிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டும்)	
				Priority	Non-Priority
1.	சமையலர் (ஆண்)	03	அரசாணை எண்: 303 நிதித்துறை, நாள்:11.10.17-ன்படி புதிய ஊதியம் ரூ.15700/- மற்றும் இதர படிகள்	GT- NIL BC- NIL BCM -NIL SC/ST- NIL SCA -1 MBC/DNC-NIL	GT- NIL BC- NIL BCM-NIL SC/ST- 2 SCA -NIL MBC/DNC-NIL
2.	சமையலர் (பெண்)	03	அரசாணை எண்: 303 நிதித்துறை, நாள்:11.10.17-ன்படி புதிய ஊதியம் ரூ.15700/- மற்றும் இதர படிகள்	GT-NIL BC- NIL BCM -NIL SC/ST- NIL SCA -NIL MBC/DNC-NIL	GT- NIL BC- NIL BCM-NIL SC/ST- 01 SCA -NIL MBC/DNC-02

மேற்கண்ட சமையலர் (ஆண்/பெண்) காலிப்பணியிடங்கள் நேர்காணல் மூலம், இனச்சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
2. சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் தரமாகவும், சுவையாகவும் சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
3. வயது வரம்பு 1.07.2020 தேதியில் SC/ST-18 முதல் 35, BC,BCM, MBC,& DNC-18 முதல் 32, இதர பிரிவினர் 18 முதல் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

மேற்படி தகுதிகளுடன் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விடுதிகளில் முழுநேர சமையல் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள், திருநெல்வேலி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் நேரில் பெற்று அதனை பூர்த்தி செய்து, உரிய சான்றுகளின் நகல் இணைத்தும், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி அதனை திருநெல்வேலி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 01.10.2020 தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து, அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் மீது அரசு பரிசீலிக்காது எனவும், மனுதாரரே முழுப்பொறுப்பு எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் 2015-16 ஆம் ஆண்டு முதல் 2018-19 ஆண்டு வரை சமையலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமன முறைக்காக நாளிதழ்களில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிர்வாக காரணங்களுக்காக இரத்து செய்யப்படுகிறது. மனுதாரர்களை மேற்கண்ட தகுதியின் அடிப்படையில் விண்ணப்பம் செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், திருநெல்வேலி

விடுதி சமையலர் (ஆண்/பெண்) பணியிடங்களுக்கான விண்ணப்பபடிவம்

விண்ணப்ப எண் (அலுவலக பணிக்காக)		:	
பணியிடம்		:	
1.	விண்ணப்பதாரரின் பெயர்	:	
2.	பிறந்த தேதி (நாள்/ மாதம்/ ஆண்டு) 01.7.2020-ன்படி வயது	:	வயது
3.	தந்தை பெயர்	:	
4.	கணவர் பெயர் (பெண் விண்ணப்பதாரருக்காக)	:	
5.	பாலினம்	:	ஆண் ☐ பெண் ☐ திருநங்கை ☐
6.	இனம்	:	OC ☐ BC ☐ BCM ☐ MBC ☐ DNC ☐ SC ☐ ST ☐ SCA ☐
7.	மதம் மற்றும் சாதி (உட்பிரிவு விவரம்)	:	
8.	சாதிச்சான்று எண் மற்றும் வழங்கப்பட்ட தேதி வழங்கப்பட்ட அலுவலகம்	:	எண்: நாள்:
9.	கல்வி தகுதி (படித்ததில் அதிகபட்சம்)	:	
10.	வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால் பதிவு எண் (ம) நாள்	:	எண்: நாள்:
11.	சமையல் பணியில் முன் அனுபவம் உள்ளதா? ஆம் எனில் எவ்வளவு காலம்	:	ஆம் ☐ இல்லை ☐ வருடம் ☐ மாதம் ☐ நாள் ☐
12.	அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா? (Priority)	:	ஆம் இல்லை
13.	ஆம் எனில் முன்னுரிமையின் விவரம் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)	:	1. முன்னாள் இராணுவத்தினர் ☐ 2. ஆதரவற்ற விதவை ☐ 3. கலப்புத்திருமணம் ☐ 4. மாற்றுத்திறனாளி ☐

			5.	நில எடுப்பு	
			6.	பர்மா /இலங்கை அகதி	
			7.	விடுவிக்கப்பட்ட அரசு அலுவலர்	
			8.	மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியாளர்	
			9.	இராணுவத்தினரின் வாரிசுதாரர்	
14.	விண்ணப்பதாரர் மீது குற்றவியல் வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா?	:	ஆம்		இல்லை	
15.	ஆம் எனில் அதன் முழு விவரம்	:				
16.	தற்போதைய இருப்பிட முகவரி (அஞ்சல் குறியீட்டுடன்)	:				
17.	நிரந்தர இருப்பிட முகவரி (அஞ்சல் குறியீட்டுடன்)	:				
18.	குடும்ப அட்டை எண் (Smart Card)	:				
19.	ஆதார் எண் (ஆளறிச்சான்றிற்காக)	:				

உறுதிமொழி

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனது அறிவிற்கு எட்டியவரை உண்மை. இவ்விண்ணப்பத்தை பொறுத்தவரை எதுவும் மறைக்கப்படவில்லை. நேர்காணலுக்கு முன்போ அல்லது பிறகோ இவ்விவரங்கள் தவறு அல்லது உண்மைக்குப் புறம்பானது அல்லது தகுதியின்மை என அறியும் பட்சத்தில் என் மீது எடுக்கப்படும் தேர்வுக்குழுவின் எவ்வித நடவடிக்கைக்கும் உட்படுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையெ' ப்பம்

இடம்:

பெயர்:

விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களின் நகல் இணைக்கப்பட வேண்டும்.

1. கல்வி தகுதி சான்று மற்றும் வயது.
2. சாதிச்சான்றிதழ்
3. முன்னுரிமை சான்றிதழ்.
4. ஆதார் அட்டை.
5. குடும்ப அட்டை/ இருப்பிட சான்று.
6. வேலை வாய்ப்பக பதிவு (இருப்பின்).
7. சமையல் பணியில் முன் அனுபவ சான்றிதழ்.